### கட்டுமான நிறுவனம் என்ற பெயரில்

# ஈரோடு த.வெ.க. எம்.எல்.ஏ. ரூ.1.65 கோடி மோசடி!

## பாதிக்கப்பட்டவர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார்!

ஈரோடு, ஆக. 1-

ஈரோட்டில் "*M/s. Yes and Yes Constructions*" என்ற பெயரில் புதிய கட்டிடம் மற்றும் கட்டுமான பொருட்கள் தயாரிப்புத் தொழில் தொடங்குவதற்காக, மலேசியாவைச் சேர்ந்த வர்மன் என்பவரிடம் பெறப்பட்ட ரூ. 2 கோடி முதலீட்டுத் தொகையில், மீதமுள்ள ரூ. 1.65 கோடியைத் தராமல் ஏமாற்றி, கொலை மிரட்டல் விடுத்ததாக மொடக்குறிச்சி தொகுதி (தவெக) மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சண்முகன் மற்றும் அவரது மகன் பிரதீப் மீது ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.





மலேசியாவில் வசித்து வரும் வர்மன் (கந்தசாமி மகன்) சார்பாக, அவரது அதிகாரம் பெற்ற முகவரான ஈரோடு சிதம்பரம் காலனியைச் சேர்ந்த சி.எஸ். சிவகுமார் (49) இந்தச் செய்தி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

அதில் கூறி இருப்பது

கடந்த 2019ஆம் ஆண்டு பிப்ரவரி 14 அன்று, தொழிலதிபர் வர்மனைச் சந்தித்த துரைசாமி மகன் மொடக்குறிச்சி த.வெ.க சட்டமன்ற உறுப்பினருமான சண்முகன் மற்றும் அவரது மறைந்த மகன் பிரதீப் ஆகியோர், கூட்டாக சேர்ந்து கட்டிடம் கட்டுமானத் தொழில் தொடங்குவதாக ஒப்புக் கொண்டனர். இதற்காக ஈரோடு மேட்டூர் ரோட்டில் உள்ள 'ஹோட்டல் ரீஜென்சி'யில் ஒப்பந்தம் எழுதப்பட்டு, முதற்கட்ட தவணையாக ரூ. 2,00,00,000 (இரண்டு கோடி ரூபாய்) பணமாகப் பெறப்பட்டது.

பணத்தைப் பெற்றுக் கொண்ட சண்முகனும் அவரது மகனும் எந்தவொரு தொழிலையும் தொடங்காமல் காலங்கடத்தி வந்தனர். இது குறித்து வர்மன் தரப்பில் நியாயமான காரணங்களைக் கேட்டபோது, அவரிடம் பெற்ற தொகையில் சில தவணைகளாக மொத்தம் ரூ. 35 லட்சத்தை மட்டுமே திருப்பிச் செலுத்தினர். (2019 அக்டோபருக்குள் ரூ. 15 லட்சம், 2022 ஜனவரியில் ரூ. 10 லட்சம், மற்றும் 2024 மே மாதத்தில் ரூ. 10 லட்சம் என ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது).

மீதமுள்ள ரூ. 1,65,00,000 (ஒரு கோடியே அறுபத்தைந்து லட்சம் ரூபாய்) தொகையைத் தராமல் தொடர்ந்து காரணங்களைக் கூறி ஏமாற்றி வந்ததாகக் கூறப்படுகிறது.

இதனிடையே, 2026 சட்டமன்றத் தேர்தலில் மொடக்குறிச்சி தொகுதியின் தமிழக வெற்றிக் கழக (தவெக) வேட்பாளராக சண்முகன் அறிவிக்கப்பட்டார். தேர்தல் முடிந்தவுடன் பணத்தைத் திருப்பித் தருவதாக வாக்குறுதி அளித்த சண்முகன், தேர்தல் முடிவுகளுக்குப் பின் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு விட்டதால் பணத்தைக் கேட்க தொடர்பு கொண்டபோது முறையான பதிலளிக்கவில்லை.

இறுதியாக, கடந்த 29.07.2026 அன்று வர்மன் தரப்பில் பணத்தைத் திரும்பக் கேட்டபோது, "நான் இப்போது ஆளும்கட்சி MLA, உன்னால் முடிந்ததைப் பார்த்துக்கொள். பணத்தையெல்லாம் திரும்பத் தர முடியாது; மீறி கேட்டால் கொன்றுவிடுவேன்" என சண்முகன் மிரட்டல் விடுத்ததாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் தொடங்குவதாகக் கூறி பணத்தைப் பெற்று மோசடி செய்த சண்முகன் மற்றும் அவரது மகன் பிரதீப் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுத்து, நிலுவையில் உள்ள ரூ. 1.65 கோடி பணத்தை மீட்டுத் தருமாறும், கொலை மிரட்டல் விடுத்ததற்காக பாதுகாப்பு வழங்குமாறும் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ள மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பேட்டி: சி.எஸ் சிவக்குமார் (முகவர்) ஈரோடு



தலைமை கழக பேச்சாளர், கழக முன்னோடி சந்துரு வாகன விபத்தில் கால் முறிவு ஏற்பட்டு திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதை அறிந்து கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் சந்தித்து நலம் விசாரித்து மருத்துவர்களிடம் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க அறிவுறுத்தினார். உடன் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர கழக பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் குகன் மற்றும் மருத்துவர் உள்ளனர்.

### வேலூரில்

# விமானச் சேவைகளைத் தொடங்க விரைந்து நடவடிக்கை எடுப்பீர்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 31-

பிராந்திய இணைப்புத் (RC-SUDAN) திட்டத்தின் கீழ் வேலூர் விமான நிலையத்தை விரைவில் வணிக ரீதியான பயணியர் செயல்பாட்டிற்குக் கொண்டுவருதல் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் விதி எண். 377 கீழ் வேலூர் தொகுதி எம்.பி. டி.எம். கதிர் ஆனந்த் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து அவர் வலியுறுத்தியதாவது:

தமிழ்நாட்டில் உள்ள வேலூர் விமான நிலையத்தை 'RC-SUDAN' பிராந்திய இணைப்புத் திட்டத் தின் கீழ் வணிக ரீதியாகத் திறந்து பயணியர் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள நீண்டகாலத் தாமதம் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்பு கிறேன்.

இவ்விமான நிலையத் திற்கான மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்து விட்டன. இந்திய விமான நிலையங்கள் ஆணையம் (AAI), விமான நிலைய உரிமத்தைப் (Aerodrome Licence) பெறுவதற்கான விண்ணப்பத்தை 27 மார்ச் 2023 அன்று சமர்ப்பித்தது. சிவில் விமானப் போக்குவரத்து இயக்குனரகம் (DGCA) 26-28 பிப்ரவரி 2024 மற்றும் மீண்டும் 11 டிசம்பர் 2025 ஆகிய தேதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டது.

இருப்பினும், விமான நிலைய உரிமம் வழங்குவதற்கு அவசியமான, சிவில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பணியகத்தின் (BCAS) இறுதிப் பாதுகாப்புச் சரிபார்ப்புப் பணி இன்னும் நிலுவையில் உள்ளது.

சென்னை, பெங்களூரு மற்றும் பிற நகரங்களுக்கு விமானப் போக்குவரத்து வசதி தேவைப்படும் வேலூர் பகுதியிலுள்ள மாணவர்கள், நோயாளிகள், தொழில் நிறுவ னங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு இத்தாமதம் பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.



எனவே, பாதுகாப்புச் சரிபார்ப்புப் பணியை முன்னுரிமை அடிப்படையில் நிறைவு செய்யவும், மேலும் தாமதமின்றி விமான நிலைய உரிமத்தை வழங்கவும், வேலூர் விமான நிலை யத்திலிருந்து வணிக ரீதியான பயணியர் விமானச் சேவைகளை விரைவில் தொடங்க வும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் BCASக்கு உத்தரவிட வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை வைத்தார்.

### ஈரோடு வடக்கு மாவட்டம்: முன்னாள் ஒன்றிய செயலாளர்

# மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.ராமசாமி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

ஈரோடு, ஆக.1-



ஈரோடு வடக்கு மாவட்டத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தின் மூத்த வழக்கறிஞரும், முன்னாள் நாடாளுமன்ற வேட்பாளரும், கோபி ஊராட்சி ஒன்றியக்குழு முன்னாள் தலைவரும், நகர கழகத்தின் பொறுப்பாளரும், ஒன்றிய கழகத்தின் செயலாளராக 15 ஆண்டு காலம் பணியாற்றிய வழக்கறிஞர்.என்.ஆர்.ராமசாமி அவர்கள் நேற்று முன்தினம் (30.07.2026 வியாழக்கிழமை) உடல் நலக்குறை வால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இவருடைய மனைவி திருமதி.சரோஜா மற்றும் மகள் பூங்கொடி, மகன் சக்திவேல் ஆகியோர் உள்ளனர். அன்னாரின் மறைவிற்கு ஆழ்ந்த வருத்ததை தெரிவித்துக் கொள்கிறோம்.

# தருமபுரியில் நுண்ணீர் பாசன வசதியை மேலும் விரிவாக்கம் செய்வீர்!

## மக்களவையில் ஆ.மணி எம்.பி. வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக, 1 –

தருமபுரி மாவட்டத்தில் நிலவும் தொடர் வறட்சி, நீர்ப்பற்றாக்குறை மற்றும் தோட்டக்கலை சாகுபடிகள் அதிகம் உள்ள சூழலை கருத்தில் கொண்டு,பிரதமர் கிரிஷி சிஞ்சாயி யோஜனா (PMKSY) – 'Per Drop More Crop' திட்டத்தின் செயல்பாடு மற்றும் அதன் தாக்கம் குறித்து பின் வரும் கேள்விகளை மக்களவையில் தருமபுரி தொகுதி உறுப்பினர் மணி ஆ.கேள்வி எழுப்பினார். அவர் எழுப்பிய கேள்வியில்,தருமபுரி மாவட்டத்தில் PMKSY திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளது, அதன் பயன்கள் குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா? மேற்கொண்டிருந்தால் அதன் விவரங்கள் என்ன?

சிறுதானியங்கள்,காய்கறிகள் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளின் பாசனத் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு சொட்டு நீர் மற்றும் தெளிப்பு பாசன வசதிகள் தற்போது உள்ளனவா?

தருமபுரி மாவட்டத்தில் நுண்ணீர் பாசன வசதியை மேலும் விரிவுபடுத்த எளிமையான விண்ணப்ப நடைமுறை, விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்கள், தொழில்நுட்ப உதவி மற்றும் மானியத்தை விரைந்து வழங்கும் நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதா?



PMKSY திட்டத்தின் கீழ் நீர் பயன்பாட்டு திறனை மேம்படுத்துதல், பாசன வசதியை அதிகரித்தல், விவசாய உற்பத்தித் திறனை உயர்த்துதல் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் கொண்ட வேளாண்மையை வலுப்படுத்த தருமபுரி மாவட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?என ஒன்றிய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணை அமைச்சர் ராம்நாத் தாக்கூரிடம் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி கேள்வி எழுப்பி உள்ளார்.



மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் 2027ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறுவதை ஒட்டி https://se.census.gov.in/ என்ற வலைதளத்தில் தனது குடும்பத்தின் சுய கணக்கெடுப்பை பூர்த்தி செய்தார். அதேபோல் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மக்கள் அனைவரும் தாங்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ள இணையதளத்தின் வாயிலாக 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான சுயவிவரத்தை பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

### சென்னையில் உலகத் தரம் வாய்ந்த

# விமானி பயிற்சி உட்கட்டமைப்பை நிறுவ ஒன்றிய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

## மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 1–

சென்னையில் உலகத் தரம் வாய்ந்த விமானி பயிற்சி உட்கட்டமைப்பை நிறுவுவது, நாட்டில் விமானி பயிற்சிப் பள்ளிகளும், வர்த்தக விமானிகளின் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது ஆகியவை குறித்து ஒன்றிய அரசிடம் தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

மழைக்கால கூட்டத்தொடரில் கலந்து கொண்டுள்ள திமுக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.கிரிராஜன், இந்தியாவில் வர்த்தக விமானி பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கையும், விமானிகளின் எண்ணிக்கையும் போதுமானதாக உள்ளதா? போதுமான பயிற்சி வசதிகள் இல்லாததால் 50 சதவீத வர்த்தக விமானிகள் வெளிநாட்டில் பயிற்சி பெற வேண்டுமா? மேலும் பல வர்த்தக விமானிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் உலகத் தரம் வாய்ந்த விமானி பயிற்சி உட்கட்டமைப்பை நிறுவ அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது? அதிநவீன உருவகப்படுத்துதல் தொழில்நுட்பம் (Simulation Technology) மற்றும் மெய்நிகர் யதார்த்தத்தைப் (Virtual Reality) பயன்படுத்தி விமானிப் பயிற்சியின் செலவைக் குறைக்க அரசாங்கத்தால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? என சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் முரளிதர் மோஹோல், நாடு முழுவதும் 63 தளங்களைக் கொண்ட, 400க்கும் மேற்பட்ட விமானங்களைக் கொண்ட, 41 விமானப் பயிற்சி நிறுவனங்கள் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தால் (DGCA) அங்கீகரிக்கப்பட்டுள்ளன; சிவில் விமானப் போக்குவரத்துத் தேவை என்பது 10 மாணவர்களுக்கு ஒரு விமானம் மற்றும் ஒரு பயிற்றுனர் என்கிற அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் 3500 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திறனுக்குச் சமமாக உள்ளது என பதிலளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் வர்த்தக உரிமம் பெற்றுள்ள விமானிகளின் எண்ணிக்கையை பொறுத்தவரை, இந்தியாவில் பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை 791ஆகவும், வெளிநாட்டில் பயிற்சி பெற்ற விமானிகளின் எண்ணிக்கை 540ஆகவும் உள்ள நிலையில், உள்நாட்டில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை தான் அதிகமாக உள்ளதாக ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

விமானி பயிற்சி உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், விமானிப் பயிற்சியை வழங்குவதற்காக சென்னையில் உள்ள ஏஏஜி சென்டர் ஃபார் ஏவியேஷன் டிரெய்னிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் பயிற்சி நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

விமானிப் பயிற்சியை மேலும் மலிவானதாக மாற்றுவதற்காக தாராளமயமாக்கப்பட்ட கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதன் கீழ் விமான நிலைய உரிமத்தொகை ரத்து செய்யப்பட்டு, நில வாடகைகள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன என்றும், அங்கீகரிக்கப்பட்ட விமான பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்படும் விமானப் பயிற்சிப் படிப்புகளுக்கு ஜிஎஸ்டியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சித் திறனை மேம்படுத்தவும் செலவுகளைக் குறைக்கவும், சிமுலேட்டர்கள் மற்றும் பிற நவீன பயிற்சித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும், தி.மு.க. எம்.பி. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

# மூனு மாச வேதனை!



**நீதிமன்ற நியமனங்களில்**
**ஊழல்**

**ஆலயச்**
**சொத்துகள்**
**சூறையாடல் என**

**மாற்றத்தை**
**மங்களகரமாய்த்**
**தொடங்கிய**
**கோட்டுமாடல்**
**அரசின்**
**நிர்வாகப்புரட்சி..**

**அமைச்சர்களின்**
**அன்றாட**

**அமெச்சூர்தனங்கள்...**

**அவ்வப்போது**
**முகம் மட்டுமே**
**காட்டிச்செல்லும்**
**கால்ஷீட் முதலமைச்சரது**
**கடமை தவறல்..**

**அரசுவிழாக்களில்**
**தலைகுனியும் தமிழ்த்தாய்**
**வாழ்த்து..**

**பட்டியலிட்டு**
**பழிவாங்க மட்டுமே**
**பயன்படுத்தப்படும்**
**காவல்துறை...**

**அரசை**
**விமர்சிப்பவர்களை**
**ஒடுக்குவதற்குப்**
**புனையப்படும்**
**வழக்குகள்..**

**வழக்கத்தில்**
**இருக்கும்**
**திட்டங்களின்மீது ஒட்டப்படும்**
**பெயர் மாற்ற**
**"ஸ்டிக்கர்கள்"..**

**சட்டம் ஒழுங்குச்**
**சீரழிவுகள்..**

**சட்டமன்ற**
**மரபுகளைச்**
**சாகடித்த**
**"சைகை"த்**
**தனங்கள்..**

**லாக்கப்**
**மரணங்கள்**

**மின் வெட்டோடு**
**கூடிய**
**மின்கட்டண**
**உயர்வுகள்..**

**மேட்டூர்அணைக்கு**
**பூட்டுப்போட்டு**
**படுகைப் பகுதியைப்**
**பாலைவனமாக்கும்**
**பாதகங்கள்..**

**மாற்றுக் கட்சி**
**எம்.எல்.ஏ.க்களை**
**விலைபேசித்**
**தூக்கும்**
**சனிக்கிழமைச்**
**சந்தையின் ராஜினாமாக்**
**காட்சிகள்..**

**அதை முதல்வரே**
**முன்னின்று**
**செய்வதாகச்**
**சொல்லும்**
**"வைகோ" சாட்சிகள்..**

**நீட்டுக்கு எதிரான**
**போராட்டத்தை**
**மெரினாவில்**
**படராமல்**
**ஒடுக்கிய**
**கடமை உணர்ச்சி..**

**அதற்காக**
**கொள்கைஎதிரி**
**பா.ஜ.க.விடம்**
**கொப்பளித்த**
**மகிழ்ச்சி..**

**"ஆஹா பேஷ்**
**பேஷ்"எனும்**
**ஆலவட்ட**
**ஷொட்டுக்கள்**

**அடுக்கடுக்கான**
**நீதிமன்றக்**
**குட்டுக்கள்..**

**ஆக**
**மொத்தத்தில்**

**ரீல்ஸ்களோடும்**
**மீம்ஸ்களோடும்**

**ஜனநாயகத்தை**
**மதிக்காத**
**குஜிலிமஸ்து**
**கூட்டம்**

**"கடைசிக்காட்சி"**
**என்று**
**ஓடாத**
**ஜனநாயகன்**
**ஓடும்**
**தியேட்டர்களில் ஒக்காந்து**
**அழுதுவழிய..**

**இந்த ஆட்சியின்**
**கடைசி நாள்**
**காட்சி**
**எப்போது**
**வரும் என**

**அறியாது**
**செய்த**
**அரசியல்**
**பிழைக்காக**

**ஆங்காங்கே**
**மக்கள்**
**ஆவேசத்தில்**
**எரிமலையாய்க்**
**குமுறி எரிய ..**

**நம்ம..**
**பட்டிமன்ற**
**மந்திரி**
**பாணியில்**
**சொன்னால்**

**"மூச்சுமுட்ட**
**பேச்சு**
**மூனுமாசம்**
**போச்சு" என**
**விரல் விட்டு**
**எண்ணுகிறது**

**வேதனையில்**
**தமிழ்நாடு...**

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித்*
*தொடர்புக் குழு*
*துணைத் தலைவர்*